**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 96/2023**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய சந்திரா **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.04.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சந்திரா | | |
| Father /Husband Name | : | பன்னீர்செல்வம் | Court | : |
| Village | : | அப்புராசபுத்தூர் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 43/2025 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதியின் காப்பாளர் மற்றும் தாயார் ஆவேன். மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

11.10.2021 தேதியிட்ட வாதி ரிஷிகேசனுக்கு அவரது பாட்டி அவையம்மாள் எழுதிக்கொடுத்து தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.12.2021 தேதியிட்ட வாதி ரிஷிகேசனுக்கு அவரது பாட்டி அவையம்பாள் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாகப்பட்டிணம் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவிலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் அசல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.